**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.35/2020**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமகிருஷ்ணன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A2,3 absent. PFA)
**31.07.2024**
**முதல் விசாரணை**

நான் பேய்க்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடு வளர்க்கும் பணி செய்து வருகிறேன். கடந்த 2018 வது வருடம் 28 ம் தேதி மாதம் நினைவு இல்லை. எனது ஆட்டில் இரண்டு கிடா மற்றும் 2 வெள்ளாட்டை யாரோ திருடிவிட்டார்கள். அந்த சமயத்தில் என்னிடம் மொத்தம் 20 ஆடுகள் இருந்தது. அவைகளை நான் எனது வீட்டிற்கு அருகே உள்ள கொட்டகையில் அடைத்து வைத்திருந்தேன். எனவே அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான்,.மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். சம்பவம் நடந்த மறுநாள் எனது ஆடானது நல்லமநாயக்கன்பட்டிஅருகே வைத்து போலிசார் கண்டுபிடித்துவிட்டதாக என்னிடம் தகவல் சொல்லி நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னிடம் ஆடு திருடியவர்களை போலிசார் அடையாளம் காண்பித்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் எனது ஆட்டை திருடியவர்கள் ஆவார். என்னிடம் புகைப்படத்தில் காண்பிக்கப்படும் ஆடுகள் தான் திருடப்பட்ட ஆடுகள் ஆகும். அது சா.பொ. 1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

புகாரை போலிசார் எழுதினார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். ஆட்டை யார் திருடினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.35/2020**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : காப்புலட்சுமி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A2,3 absent. PFA)
**31.07.2024**
**முதல் விசாரணை**

நான் பேய்க்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா1 எனது கணவர். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எனது ஆட்டில் இரண்டு கிடா மற்றும் 2 வெள்ளாட்டை யாரோ திருடிவிட்டார்கள். அந்த சமயத்தில் எங்களிடம் மொத்தம் 20 ஆடுகள் இருந்தது. அவைகளை நாங்கள் எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள கொட்டகையில் அடைத்து வைத்திருந்தேன். அது சம்பந்தமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவம் நடந்த மறுநாள் எனது ஆடானது நல்லமநாயக்கன்பட்டி அருகே வைத்து போலிசார் கண்டுபிடித்துவிட்டதாக என் கணவரிடம் தகவல் சொல்லி அவர் ஆடுகளை திரும்ப பெற்றுக் கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரிகளை தெரியாது. ஆட்டை யார் திருடினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னை போலிசார் காவல் நிலையத்தில் வைத்தும் வீட்டில் வந்தும் விசாரித்தார். போலிசாரிடம் ஆடு காணாமல் போனது என்றும் மட்டும் சொன்னோம். போலிசார் கேட்டுக் கொண்டற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.35/2020**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துபாண்டி | Caste | : |
| Father 's Name | : சுப்பிரமணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A2,3 absent. PFA)
**31.07.2024**
**முதல் விசாரணை**

நான் பேய்க்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் செண்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா1 எனது மாமா ஆவார். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எனது மாமாவின் ஆட்டில் இரண்டு கிடா மற்றும் 2 வெள்ளாட்டை யாரோ திருடிவிட்டார்கள். அந்த சமயத்தில் என் மாமாவிடம் மொத்தம் 20 ஆடுகள் இருந்தது. அவைகளை வீட்டிற்கு அருகே உள்ள கொட்டகையில் அடைத்து வைத்திருந்தார். அது சம்பந்தமாக எனது மாமா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவம் நடந்த மறுநாள் என் மாமாவின் ஆடானது நல்லமநாயக்கன்பட்டி அருகே வைத்து போலிசார் கண்டுபிடித்துவிட்டதாக தகவல் சொல்லி அவர் ஆடுகளை திரும்ப பெற்றுக் கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரிகளை தெரியாது. ஆட்டை யார் திருடினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னை போலிசார் காவல் நிலையத்தில் வைத்தும் வீட்டில் வந்தும் விசாரித்தார். போலிசாரிடம் ஆடு காணாமல் போனது என்றும் மட்டும் சொன்னோம். போலிசார் கேட்டுக் கொண்டற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.